செ.வெ.எண்: 698 /2016 நாள்: 04.10.2016

# பத்திரிகை செய்தி'

## சட்டத்திற்கு முரணாக குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்த பெண்ணிடமிருந்து இரண்டு குழந்தைகள் மீட்பு

அஞ்சுகிராமம் பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் பள்ளியில் பயிலும் இரண்டு குழந்தைகளின் பிறப்பு சான்றிதழ் போலியாக உள்ளது எனவும் இக்குழந்தைகளை ஸ்ரீலட்சுமிபுரத்தை சேர்ந்த சரஸ்வதி என்பவர் சட்டத்திற்கு புறம்பாக தத்தெடுத்து வளர்த்து வருவதாகவும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. S. குமுதா அவர்களுக்கு வந்த புகாரின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரைப்படி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. S. குமுதா மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு பணியாளர்கள் நேரில் சென்று விசாரணை நடத்தினர்.

விசாரணையில் புகாரில் கூறப்பட்டிருந்த அனைத்து சம்பவங்களும் உண்மை எனத் தெரியவந்தது. இதுகுறித்து கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் ஆள்கடத்தல் தடுப்பு பிரிவு மற்றும் அஞ்சுகிராமம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் ஆகியோர் உதவியுடன் குழந்தைகள் மீட்கப்பட்டனர். மீட்கப்பட்ட குழந்தைகள் கன்னியாகுமரி மாவட்ட குழந்தைகள் நலக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர். இச்சம்பவம் குறித்து குழந்தைகள் நலக்குழுவினர் சரஸ்வதியிடம் மேற்கொண்ட விசாரணை அறிக்கையின்படி குழந்தைகளை சட்டத்திற்கு முரணாக முன்னாள் குழந்தைகள் காப்பக நிர்வாகி ஜான்சி என்பவரிடம் விலைக்கு வாங்கி வளர்த்ததாகவும், இதற்கு செல்வம், ஜஸ்டின் மற்றும்  ஆகியோர் உடந்தையாக இருந்ததாகவும் தெரிவித்ததின் அடிப்படையில், சரஸ்வதி மற்றும் தொடர்புடைய நபர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு குழந்தைகள் நலக்குழு அஞ்சுகிராமம் காவல் நிலையத்தில் புகார் வழங்கியுள்ளது. இதனை தொடர்ந்து காவல்துறையினர் சரஸ்வதியை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணையை துரிதப்படுத்தி சம்பவத்தில் தொடர்புடைய நபர்கள் அனைவரையும் கைதுசெய்யுமாறும், குழந்தைகளின் பெற்றோர்கள் யார் என்பதை கண்டறியுமாறும் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. தர்மராஜன் இ.கா.ப., அவர்கள் கூறினார்.

மேலும் மீட்கப்பட்ட குழந்தைகள் இருவரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலம் குழந்தைகள் காப்பகத்தில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சாவன் இ.ஆ.ப., அவர்கள் கூறுகையில் பொதுமக்கள் சட்டத்திற்கு முரணாக குழந்தைகளை தத்தெடுப்பதை தவிர்த்தால் மட்டுமே இது போன்ற சமூக விரோதிகளால் குழந்தைகள் கடத்தப்படுவது தவிர்க்கப்படும் எனவும், பொதுமக்கள் வழிமுறைகளை பின்பற்றி சட்டப்படி குழந்தைகளை தத்தெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்.

---

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**